# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2208/33 - 2020 දෙසැම්බර් මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.12.31

*2208/33 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

கோட்டாபய ராஜபக்ஷ

**சனாதிபதியின் பணிப்புரை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் வண்ணம் கொவிட்-19 தடுப்பூசியேற்றல் தேசிய திட்டத்துக்கான சனாதிபதி செயலணியொன்றை நிறுவுதல்.

1. திரு.லலித் வீரதுங்க
   சனாதிபதியின் பிரதம ஆலோசகர்

2. மேஜர் ஜெனரால் வைத்தியர் சஞ்ஜீவ முணசிங்க அவர்கள்
   செயலாளர், சுகாதார அமைச்சு

3. வைத்தியர் அமல் ஹர்ஷ த சில்வா அவர்கள்
   செயலாளர், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

4. திரு.கே.ஆர். உடுவாவல
   செயலாளர், மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சு

5. ஜெனரால் சவேந்திர சில்வா அவர்கள்
   தரைப்படைத் தளபதி /கொவிட் - 19 செயலணியின் தலைவர்


1A - G 33462 — 380 (2021/01)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

6. வைத்தியர் பிரசன்ன குணசேன அவர்கள்
தலைவர், அரச மருந்துக் கூட்டுத்தாபனம்

7. வைத்தியர் அநுருத்த பாதெணிய அவர்கள்
சிறுவர் நரம்பியல் நோய் நிபுணர் /தலைவர், அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம்

8. வைத்தியர் அசேல குணவர்த்தன அவர்கள்
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!

உலக சுகாதார அமைப்பினால் 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதத்தின்போது தொற்றொன்றாகப் பிரகடனப்படுத்தப்பட்ட கொவிட் - 19 தேசிய சுகாதாரக் கட்டமைப்புக்குப் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தி மற்றும் குடிமக்களின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்குத் தடை ஏற்படும் விதத்தில் பரவிச்செல்வதனாலும்,

2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியாகும்போது கொவிட்- 19 நோயாளர்களாக இனங்காணப்பட்டோர்களின் எண்ணிக்கை 41,054 மற்றும் ஏற்பட்ட மரணங்களின் எண்ணிக்கை 194 ஆகும் என்பதாலும்,

பாதுகாப்பான மற்றும் வினைத்திறனான தடுப்பூசியொன்றின் மூலம் பொதுமக்களின் நோயெதிர்ப்புச் சக்தியை விருத்தி செய்வது, நோயெதிர்ப்புச் சக்தியை உயர்த்துவதற்கு மற்றும் நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் காரணமான மிகவும் பயனுள்ளதான மற்றும் நீண்ட காலம் நிலைத்து நிற்கக்கூடிய திறமுறை என்பதாலும்,

கொவிட்-19 இற்கான நோயெதிர்ப்புச் சக்தியை பொதுமக்கள் பெறுவதற்காக, இவ்வாறான தடுப்பூசியொன்றைக் குறித்த காலத்தினுள் மற்றும் வினைத்திறனான முறையில் பெற்றுக்கொடுப்பது தற்போது நாடு முகங்கொடுக்கும் முதன்மைத் தேவைப்பாடொன்றாகும் என்பதாலும்,

தடுப்பூசியேற்றல் திட்டத்தைப் பயனுள்ளவாறு செயற்படுத்துவதற்காக உரிய தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான அரச நிறுவனங்கள் மற்றும் தரப்பினர் இடையே இணைப்பாக்கத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்காக உயர் மட்டத்திலான தலையீடுகள் தேவை என்பதனாலும்,

முன்னுரிமையைத் தீர்மானிப்பது மற்றும் பெறுகை ஆதாரங்கள் தொடர்பான அதிகாரங்கள் என்பன சுகாதார அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும்,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து, மேற்குறிப்பிட்ட தங்களை, அதாவது,

1. திரு.லலித் வீரதுங்க
சனாதிபதியின் பிரதம ஆலோசகர்

2. மேஜர் ஜெனரால் வைத்தியர் சஞ்ஜீவ முணசிங்க அவர்கள்
செயலாளர், சுகாதார அமைச்சு

3. வைத்தியர் அமல் ஹர்ஷ த சில்வா அவர்கள்
செயலாளர், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு

4. திரு.கே.ஆர். உடுவாவல
செயலாளர், மருந்து உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்
இராஜாங்க அமைச்சு

5. ஜெனரால் சவேந்திர சில்வா அவர்கள்
தரைப்படைத் தளபதி /கொவிட் - 19 செயலணியின் தலைவர்

6. வைத்தியர் பிரசன்ன குணசேன அவர்கள்
தலைவர், அரச மருந்துக் கூட்டுத்தாபனம்

7. வைத்தியர் அநுருத்த பாதெணிய அவர்கள்
சிறுவர் நரம்பியல் நோய் நிபுணர் /தலைவர், அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம்

8. வைத்தியர் அசேல குணவர்த்தன அவர்கள்
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

கொவிட்-19 தடுப்பூசியேற்றல் தேசிய திட்டத்துக்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாகப் பின்வரும் பணிகளைச் செயற்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

(அ) தொழில்நுட்ப விசேட நிபுணர்களுடன் கலந்துரையாடி மற்றும் தற்போதுள்ள சாட்சிகளை அடிப்படையாகக்கொண்டு இலங்கைக்கு மிகவும் பொருத்தமான பாதுகாப்பு மற்றும் வினைத்திறனான தடுப்பூசியொன்றை கொவிட்-19 க்காக இனங்காணுதல்.

(ஆ) கொவிட்-19 தடுப்பூசியை உரிய காலத்தினுள் பெற்றுக்கொடுக்கும்போது அவசர அங்கீகாரம் வழங்குதல், துரித பெறுகை நடவடிக்கைகள், இறக்குமதி, சுங்க விடுவிப்பு மற்றும் தேசிய நோயெதிர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக விநியோகம் செய்யும்போது பொருத்தமான மற்றும் முறையான ஒழுங்குறுத்துகை மற்றும் நிருவாக விதிமுறைகளைத் தாபித்தல்.

(இ) தொழில்நுட்ப மற்றும் பொருள்ரீதியான ஒத்துழைப்புக்காக உரிய உயர்ஸ்தானிகர் அலுவலகங்கள், உதவி வழங்கும் நிறுவனங்கள், ஐக்கிய நாடுகளின் முகவராண்மைகள் மற்றும் தொழிற்துறையினருடன் பணியாற்றுதல்.

(ஈ) தடுப்பூசியேற்றும் முதலாவது கட்டத்திற்காக கொவிட்-19 நோய்த் தொற்று ஏற்படுவதற்கு அதிக ஆபத்துமிக்க மக்கள் குழுவினர்களை இனங்கண்டு முன்னுரிமை வழங்குதல் மற்றும் அதன்பின்னர் முறையே ஏனையோருக்குப் பெற்றுக்கொடுத்தல்.

(உ) தெளிவான பொறுப்பு, தரநிலை வழிநடத்தல்கள், செயற்பாட்டு விதிமுறைகள் மற்றும் பங்குபற்றும் தரப்பினர்களுக்காக கால அட்டவணை மற்றும் அறிக்கையிடும் செயற்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பு உள்ளடங்கும் கொவிட் - 19 தடுப்பூசியை விநியோகித்தல் மற்றும் தடுப்பூசியேற்றும் திட்டமொன்றைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்.

(ஊ) தடுப்பூசிகளின் தொகையினைக் களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல், வெப்ப நிலையைப் பராமரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் தடுப்பூசித் தொகையினை அறிக்கையிடுவதற்காகத் தற்போதுள்ள முறைமைகளின் குறைபாடுகளை இனங்காணுவதற்காகத் தற்போதைய வழங்கல் முறைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

(எ) தடுப்பூசிப் பாவனையை மேற்பார்வை மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவை உள்ளடங்கும் விதத்தில் தடுப்பூசிகளின் தொகை முகாமைத்துவம் மற்றும் விநியோகித்தலின் வலுவான வழங்கல்முறைக்கான தகவல் தொகுதியொன்றினைத் தாபித்தல்.

(ஏ) தடுப்பூசியேற்றலுக்கான இடங்கள் மற்றும் தடுப்பூசியேற்றும் குழுவினை இனங்காணுதல், வைத்திய உபகரணங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல், குளிர் நிலைமுறை கொள்ளளவு மற்றும் ஊசிமருந்துகளை களஞ்சியப்படுத்தல் போன்ற செயற்பாடுகள் உள்ளடங்கும் விதத்திலான தடுப்பூசியேற்றல் திட்டத்தைச் செயற்படுத்துதலுக்குப் பொருத்தமான வழங்கல் சேவைகள் திட்டமொன்றைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(ஐ) தடுப்பூசிகளின் விநியோகம் மற்றும் குறித்த காலப்பகுதியினுள் தடுப்பூசியேற்றல் என்பவற்றை உறுதிசெய்வதற்காகத் தேவையான மனித வளம், தொழில்நுட்ப மற்றும் நிதி ஒதுக்கீடுகளை இனங்காணுதல்.

(ஒ) கொவிட் - 19 தடுப்பூசி தொடர்பான உலகலாவிய தகவல்களைத் தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல் மற்றும் அத்தகவல்களை ஏற்றவாறு, கொவிட்-19 தடுப்பூசிகளை விநியோகித்தல் மற்றும் தடுப்பூசியேற்றுதல் செயற்பாட்டினைத் திட்டமிடும்போது மற்றும் தயாரிக்கும்போது பயன்படுத்துதல்.

(ஓ) தடுப்பூசியேற்றும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பாதகமான சம்பவங்களை அறிக்கையிடுவதற்காகத் தடுப்பூசி ஆய்வுத் திட்டமொன்றைச் செயற்படுத்துதல்.

(ஔ) தடுப்பூசியினை விநியோகித்தல் மற்றும் தடுப்பூசியேற்றுதலை வெற்றிகரமாக மற்றும் குறித்த காலச்சட்டகத்தினுள் மேற்கொள்ளுவதற்காக வழங்கல் முறைகள் மற்றும் சுகாதார பணியாளர் குழுவினை முறையாகப் பயிற்றுவித்தலை உறுதிப்படுத்துவது மற்றும் பயிற்சியின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக உரிய விசேட நிபுணர்கள் மற்றும் நிறுவனங்களோடு இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஃ) தடுப்பூசிகளின் விநியோகம் மற்றும் தடுப்பூசியேற்றலின் முன்னேற்றம்பற்றி அறிக்கையிடுவதற்குப் பொதுத் தொடர்பாடல் முறையொன்றைத் தாபித்தல்.

மேலும் **சனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க அவர்களை செயலணியின் தலைவராகவும்**,

**சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் சந்திமா விக்கிரமசிங்க அவர்களை செயலாளராகவும்** நியமிக்கின்றேன்.

மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாக ஆலோசனை வழங்குவதற்கும், தேவைப்படக் கூடிய விடயங்களைத் தேடிப்பார்ப்பதற்கும் மற்றும் பரிசோதிக்கவும் மேற்போந்த சனாதிபதி செயலணிக்கு இத்தால் அதிகார மளிக்கின்றேன்.

மேலும், இந்த சனாதிபதி செயலணியினால் ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமைய செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்க வேண்டுமெனவும் நான் இத்தால் சகல அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றத் தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், மேற்குறிப்பிட்ட செயலணியின் உறுப்பினர்களுக்கான உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர**,
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.